DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 01/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-4 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---------------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முத்து |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. மாரிமுத்து |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent. u/s 355 BNSS petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 13.10.2025

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கொடிபங்கில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன்.கடந்த 2018 ஆண்டு தேதி மாதம்நினைவில் இல்லை நான் வேறு வழக்கு சம்மந்தமாக தொண்டி காவல்நிலையம் சென்றிருந்தேன். அப்போது போலிசார் தாங்கள் ஒரு வழக்கு சம்மந்தமாக கைப்பற்றிய 4 1/2 பவுன் தங்க நகைகளுக்கும், ஒரு புல்லட் வாகனத்துக்கும் சாட்சி கையொப்பம் இடும்படி என்னிடம் கேட்டனர். மேற்படி தங்க

நகைகள் மற்றும் வாகனம் எந்த வழக்கு சம்மந்தமாக கைப்பற்றப்பட்டது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. போலிசார்என்னிடம் கையொப்பம் வாங்கிய ஆவணங்களில் இடம்பெற்றுள்ள தகவல்கள் குறித்து எனக்கு எதுவும்தெரியாது. போலிசார் கேட்டதால் கையொப்பம் மட்டும் போட்டுகொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் எதிரி அருண்குமாரின் **ஒப்புதல் வாக்குமூலத்தில் இடம்பெற்றுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் இடம்பெற்றுள்ள **முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** இவ்வழக்கு குறித்து எனக்கு வேறு எதுவும் தெரியாது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் கையொப்பம் இட்ட இரண்டு ஆவணங்களில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போலிசார் கைப்பற்றியதாக சொல்லியுள் நகைகையும், புல்லட் வாகனத்தையும் எங்கு வைத்துபோலிசார் கைப்பற்றினார் என்றால் தொண்டி காவல் நிலையத்தில் வைத்து கைப்பற்றினார். இவ்வழக்கின் இரண்டு எதிரிகளையும் என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியாது. நான் கையொப்பம் இட்ட ஆவணங்களில் என்னுடன் வேறு யாரேனும் சாட்சி கையொப்பம் இட்டனரா என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது.

2. இவ்வழக்கின் எதிரிகளின் கையொப்பம் என்முன்னிலையில் பெறப்பட்டதா என்றால் இல்லை.இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.